**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 242/2019 |
| Name | : Menakadevi |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது தனியார் மருத்துவராக உள்ளேன். நான் உடுமலை அரசு மருத்துவமனையில் பணி மருத்துவரக பணிபுரிந்த போது கடந்த 02.03.2018 ம் தேதி பகல் 01.30 மணிக்கு மருத்துவமனையில் அலுவலில் இருந்த போது தலைமை காவலர் 902 முருகவேல் அவர்கள் மூலம் மடத்துக்குளம் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் பேரில் மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 31/2018 ச/பி, 279, 304(ஏ) இதச ன் படியான வழக்கில் இறந்து போன குழந்தையம்மாள் (எ) வள்ளியம்மாள் என்பவரின் பிரேதத்தை உடற்கூறாய்வு செய்ய வேண்டி 02.03.2018 ம் தேதி பகல் 01.20 மணிக்கு பார்வையிட்டேன். அப்போது வலது பக்க முன் நெற்றியில் சிராய்ப்பு காயமும், வலது முழங்கை இணைப்பில் சிராய்ப்பு காயமும், இடது கன்னத்தில் சிராய்ப்பு காயமும், இடது தொடை முதல் முட்டி வரை சிதைந்த காயமும், வலது முழங்கால் இணைப்பில் காயமும், தலையின் பின்புறம் கன்றிய காயமும் காணப்பட்டது. பிரேத உடற்கூறாய்வு செய்த போது

1. இடது தொடையில் எலும்பு முறிவு

2. இடது கால்கிளில் எலும்பு முறிவு

3. வலது காலில் முறிவு காணப்பட்டது.

4. மூளையின் பின் பக்கம் ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது.

இதன் அடிப்படையில் இறப்பானது விபத்தினால் உள்ளுறுப்புகள் மற்றும் மூளையில் ஏற்பட்ட ரத்தப் போக்கினாலும் அதனால் ஏற்பட்ட அதிச்சியினாலும் ஏற்பட்டுள்ளது என்றும் பிரேத பரிசோதனைக்கு 12 முதல் 18 மணி நேரத்திற்கு முன்பு இறப்பு நடந்துள்ளது என்று எனது கருத்துடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:50:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்